# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,925/3 — 1970 සැප්තැම්බර් 30 වැනි බදාදා — 1970.9.30

14,925/3 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1946, இலங்கை (அரசமைப்பு) அரசப்பேரவைக் கட்டளை

**47 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்**

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டபடியான 1946, இலங்கை (அரசமைப்பு) அரசப்பேரவைக் கட்டளையின் 47 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, முதலமைச்சரும், பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சருமான சிறிமாவோ ரத்வத்த டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், இலங்கையில் நான் இல்லாத காலத்திற்கு, ஜயகொடி ஆரச்சிகே லக்ஷ்மன் ஜயகொடி, எனது பாராளுமன்றச் செயலாளருக்கு, 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (40 ஆம் அத்தியாயமான) பொதுசனப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் பகுதி III ஆல் எனக்கு அளிக்கப்பட்ட அல்லது என்மேல் விதிக்கப்பட்ட சகல அதிகாரங்களையும் கடமைகளையும், இவ்வறிவித்தல் மூலம் கையளிக்கிறேன்.

சிறிமா ஆர். டி. பண்டாரநாயக்கா,
முதலமைச்சரும், பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சரும்.

கொழும்பு,
1970, செத்தெம்பர் 30.

9–279/1

---

### பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, முதலமைச்சர் சிறிமாவோ ரத்வத்த டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், இலங்கையில் நான் இல்லாத காலத்தில் மேற்கூறிய 5 ஆம் பிரிவின்கீழ் எனக்குப் பதிலாகக் கடமையாற்றுவதற்கு வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சருக்கு இத்தால் அதிகாரமளிக்கிறேன்.

சிறிமா ஆர். டி. பண்டாரநாயக்கா,
முதலமைச்சர்.

கொழும்பு,
1970, செத்தெம்பர் 30.

9–279/2


இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.


538/5